முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 18 திகதி முதல்
சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 25 திகதி வரை
(04.12.2022 ஞாயிறு முதல் 11.12.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. வரம்தந்து வள்ளலாய் வந்தமுருகா
வையகம் காத்திடும் ஞானக்குமரா
அறம் தந்து கலியினில் அருளும்
அரங்கனாக அகத்தியன் என்னிடம் கேட்க
2. கேட்கவே வார ஆசிதனை
குறைவிலா சுபகிருது தேள் திங்கள்
திட்டமுடன் மூவாறுதிகதிமேல் இருபானைதிகதி வரை
தேசமாம் இந்தியா தமிழகம் தன்னில்
3. தன்னிலே நடக்கும் வாரநிகழ்வாக
தக்க வருங்கால பலனுரைப்பேன்
இன்னாளில் ஆளுமை சக்திகள்
இரங்கி மக்களை அனுகி
4. அனுகியே தயவான வழிகளில்
அனைத்துத் துறை வழியான
அனுபவமிலா செயல்பாடுகளை
அகற்றி அதிகாரச் சுமை நீக்கி
5. நீக்கியே விலை ஏற்றமெனும்
நீதியிலா முறைகளை கட்டுப்படுத்தி
தேக்கமின்றி சகாயமான வகை
தேவைகள் பூர்த்திபட இலகுவாய்
6. இலகுவாய் ஆளுமைகள் சிறக்க
இந்தவித கால பின்னடைவு
கோலமதாய் சடுதி அகன்றுமே
குறைவிலா வளர்ச்சி மாற்றம்
7. மாற்றம் தேசமதும் கண்டு
மக்களிடை செயல்பாடுகள்
ஆற்றலாக ஞானவழிகளாக
அமைதிபட சிறந்து விளங்கும்
8. விளங்கவே கலிஎனும் அரக்கன்
வினையாகப் பரவி வதைசெய்யும் முன்
களங்கமான அதிகார வர்க்கங்கள்
கட்டாயம் மனம் மாறி இனிதே

9. இனிதே தரும ஞான வழி
எல்லோருக்கும் அரச நலன்கள்
கனிவாய் கிடைக்கும் வகையில்
கடமை தவறா செயல்பாடுகாண
10. காணவே ஆட்சிநிலைதனில்
கட்டாயம் ஞான ஆட்சியாக
ஞானபண்டிதன் அருளால் நடக்கும்
நாட்டிவந்த வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 18 ம் நாள் 04.12.2022 முதல் கார்த்திகை மாதம் 25 ம் நாள் 11.12.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலகமக்களுக்கு வரம் தந்து காத்திடவே வள்ளலாய் அவதரித்த முருகப்பெருமானே இவ்வுலகை காத்து ரட்சிக்கும் ஞானக்குமாரனே மக்களுக்கு அறவழி போதித்தும் அளவிலாது தானதருமங்களை செய்தும் அருள் செய்தும் காக்கும் மகா ஞானி ஆறுமுக அரங்க மகானாக அவதரித்து தற்காலத்திலே இந்தியாதமிழகத்தின் எதிர்காலம் குறித்து அகத்தியன் எம்மிடம் கேட்க அகத்திய மகரிஷியானுமே இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் கார்த்திகைமாதம் 18ம் நாள் 04.12.2022 ஞாயிற்றுக் கிழமை முதல் கார்த்திகை 25ம் நாள் 11.12.2022 ஞாயிற்றுக்கிழமைவரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்தியமகரிஷி.

ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள் மக்கள்மீது இரக்கம் கொண்டு மக்களை தயவுடன் அனுகிட வேண்டும். எல்லா துறைகளிலும் உள்ள அனுபவமற்ற செயல்பாடுகளை எல்லாம் விட்டுவிட்டு மக்கள்மீது செலுத்தும் அதிகாரங்களை குறைத்துக்கொண்டு மக்களுக்கு ஏதுவாக நடப்பதுடன் மக்களை வருத்தும் விலை வாசி ஏற்றங்களை கட்டுக்குள் கொண்டு வருவதுடன் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை குறைந்த விலையில் கிடைக்கும் விதத்தில் செயல் படுவதுடன் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்திட வேண்டுமப்பா.

மக்களின் தேவைகள் எளிமையாக பூர்த்தி ஆகிட தற்சமயம் நிகழ்ந்து வரும் பொருளாதார பின்னடைவுகள் எல்லாம் விரைந்து அகன்று எல்லா வகையிலும் நாடு வளர்ச்சி அடையும். மக்களின் செயல்பாடுகளும் அறிவுமிக்க செயல்பாடுகளாக மாறிடும் மக்கள் சக்தி பெருகிடும்.

கலிஎனும் அரக்கனின் செயல்பாடாக நாடெங்கும் பேரிடர்கள் பரவி மக்களை வதம் செய்வதற்கு முன்னராகவே அரசு விழித்தெழுந்து அதிகாரவர்க்கத்தில் உள்ள களங்கங்களை அகற்றுவதுடன் அதிகார வர்க்கமும் ஆட்சியாளர்களும் மனம்மாறி தரும ஞான வழிகளை கடைபிடித்து வருவதுடன் மக்கள் அனைவருக்கும் அரசின் நலத்திட்ட உதவிகள் விரைந்து கிடைத்திட வழிவகைசெய்தும் கடமை தவறாது நடந்தும் வரவர ஆட்சி நிலைத் தன்மை பெறும். நாட்டின் ஆட்சி உறுதியாக ஞான ஆட்சியாக ஞானபண்டிதனார் முருகப்பெருமானின் ஆசியாலும் அருளாலும் இனிதே நடந்தேறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–